செ.வெ.எண்:22 நாள்:08.11.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.11.2021) நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.11.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

நாகப்பட்டினம் மாவட்டம் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு இந்த சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதற்கு முன்னர் 6 ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த வாரம் அதிகமழைக்கான வாய்ப்பு உள்ள காரணத்தினால் இந்த ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் அனைத்து நிலை அலுவலர்களும் குறிப்பாக கிராம நிர்வாக அலுவலர்கள், ஊராட்சி செயலர்கள் போன்ற அனைவரும் காணொலி காட்சி வாயிலாக அந்தந்த வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் கலந்துக் கொண்டனர். இந்த வடகிழக்கு பருவமழையில் நம் மாவட்டத்தில் இந்த வருடத்தை பொருத்தவரை 39% மழை பதிவாகியுள்ளது. இந்த மாவட்டமானது மீனவர்கள் மற்றும் விவசாயிகள் அதிகம் உள்ள மாவட்டமாகும். குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறவுள்ள காரணத்தினால் மீனவர்கள் 13ஆம் தேதி வரை கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் எனவும், விவசாயிகள் நீர்தேங்கியுள்ள இடங்கள், தாழ்வாக உள்ள மின்கம்பங்கள் போன்ற இடங்களுக்கு செல்லாமல் கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் ஊராட்சி செயலர்கள் உதவியுடன் தேங்கியுள்ள நீரை வடிகால்கள் மூலம் வெளியேற்ற வேண்டும் எனவும், மேலும் கண்காணிப்பு குழுவானது ஊராட்சி ஒன்றியம், நகராட்சி அளவிலும் முழு வீச்சில் கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ளது.

நம் மாவட்டத்தில் 12 புயல் பாதுகாப்பு மையங்கள், 5 பல்நோக்கு பேரிடர் பாதுகாப்பு மையங்கள், 144 சமுதாயகூடங்கள், பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவை பொதுமக்கள் தங்குவதற்கு ஏதுவாக தயார் நிலையில் உள்ளது. அந்த இடங்களில் மருத்துவம், குடிநீர், மின்சாரம், கழிவறை போன்ற வசதிகளை செய்து வைக்கவும், காவிரி மற்றும் வெண்ணார் கோட்டம் உள்ள பொதுப்பணித்துறை சார்பில் 20,000 தடுப்பு மூட்டைகள் தயார் நிலையில் உள்ளது. மேலும், ஆற்றின் கரையோரப் பகுதிகளை அடிக்கடி கண்காணிக்கவும் உரிய அலுவலர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள், ஊராட்சி செயலர்கள் ஆகியோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து இன்று மாலை 03.00 மணிக்கு அனைத்து ஊராட்சி மன்ற அலுவலகங்களிலும் ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், வார்டு

உறுப்பினர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், ஊராட்சி செயலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், பள்ளி தலைமையாசிரியர்கள் ஆகிய அனைவரும் இந்த பஞ்சாயத்து அளவில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துக்கொண்டு அவர்களுடைய கிராமத்திற்கு தேவையான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.கு.ஜவஹர் இ.கா.ப., மாவட்ட வன உயிரின காப்பாளர் திரு.யோகேஷ் குமார் மீனா இ.வ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.ஷகிலா, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பெ.பெரியசாமி, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.தனபால், அனைத்து துறை அரசு அலுவலர்கள் மற்றும் அனைத்து நிலை அலுவலர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**